# புதிய உடன்படிக்கை

# பாகம் 8

## பழைய உடன்படிக்கையையும், புதிய உடன்படிக்கையையும் கலப்பதனால் உள்ள ஆபத்துகள்.

***கலாத்தியர்;*** *2;16, 3;10-12, 18 4;9 5;4* ***அப்;*** *15;10-11* போன்ற வசனங்கள் பழைய உடன்படிக்கையில் உள்ள கட்டளைகளை கைக்கொண்டு நடப்பதன் மூலம் யாரும் நீதிமான்களாக்கப்பட முடியாது என்பதை தெளிவாக்குகின்றன. இயேசு கிறிஸ்து பல பழைய சம்பிரதாயங்களை ஏன் கைக்கொள்ளவில்லை என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்ட போது, அதற்கு அவர் ஒரு உவமைமூலம் பதில் சொல்கிறார்.

*லூக் 5:36 அவர்களுக்கு ஒரு உவமையையும் சொன்னார்: ஒருவனும் புதிய வஸ்திரத்துண்டைப் பழைய வஸ்திரத்தின்மேல் போட்டு இணைக்கமாட்டான், இணைத்தால் புதியது பழையதைக் கிழிக்கும்; புதியவஸ்திரத்துண்டு பழைய வஸ்திரத்துக்கு ஒவ்வாது.*

*37 ஒருவனும் புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கமாட்டான்; வார்த்துவைத்தால் புதுரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும், இரசமும் சிந்திப்போம், துருத்திகளும் கெட்டுப்போம்.*

*38 புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைக்கவேண்டும், அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும்.*

*39 அன்றியும் ஒருவனும் பழைய ரசத்தைக் குடித்தவுடனே புது ரசத்தை விரும்பமாட்டான், பழைய ரசமே நல்லதென்று சொல்லுவான் என்றார்.*

இந்த உவமையில் இருந்து பழைய உடன்படிக்கையையும் புதிய உடன்படிக்கையையும் சேர்க்க முடியாது; புதிய உடன்படிக்கையில் இருந்து எதையாகிலும் எடுத்து பழைய உடன்படிக்கையுடனோ, பழைய உடன்படிக்கையில் இருந்து எதையாகிலும் எடுத்து புதிய உடன்படிக்கையுடனோ ஒட்டுப்போட முடியாது; அது ஒவ்வாது; பழைய உடன்படிக்கையில் பழகிப்போனவர்கள் புதிய உடன்படிக்கையை விரும்ப மாட்டார்கள் என்று இயேசு சொல்லுகிறார்.

**Bro D.Vergin kumar,**

**To continue..**